<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>

<u>ஜெயங்கொண்டம்.</u>

<u>CC No. 83 /2021</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.ரவிச்சந்திரன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தாகுமரன், மூன்றாம்நிலைஎழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிச்சந்திரன் | வயது | : | 51/26 |
| த.பெ. | : | சந்திரகாசன் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | முனியங்குறிச்சி | நிலை | : | LW06/ PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(எதிரிஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:</u>

நான் முனியங்குறிச்சியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன்.2021ம் வருடம் ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, ராதாகிருஷ்ணனுக்கும் கஸ்தூரிக்கும் இடையே சண்டை என்று எனக்கு போன் வந்தது. நான் மறுநாள் சம்பவ இடத்திற்கு போனபோது போலீசார் வந்து வரைபடம் வரைந்து, எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்போது என்னை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியாக இருந்து அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ.3 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 என் சொந்த அண்ணி என்றால் சரிதான். எனது ஊரும் அவர் ஊரும் வேறு வேறு என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 என் அண்ணி என்பதால் நான்அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான்அந்த ஊரே இல்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்துகையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/
ஒம்/–P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.